**ஜூன் – 6**

**"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லௌகீகக் கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கு, எச்சரிக்கையாயிருங்கள்." - லூக் 21 : 34.**

எப்படிப்பட்ட ஒரு வேலை நம்முன்னிருக்கிறது என்பதையும், தெளிந்த புத்தி, ஜாக்கிரதை, உறுதி ஆகியவைகளுக்கான அவசியம் எப்படிப்பட்டது என்றும், நாம் தெளிவாக அறிந்திருக்கிறோம்! இது ஜீவியக்காலம் முழுவதும் செய்யப்பட வேண்டிய ஒரு வேலை, நம்முடைய மாம்சத்தை ஆக்கிரமித்திருக்கிற ஒரு பலம் பொருந்திய எதிரிக்கு விரோதமாக ஜீவியக்காலம் முழுவதும் செய்யப்பட வேண்டிய ஒரு போராட்டம். வெளியே இருக்கிற சக்திகள் உண்மையாகவே பலம் பொருந்தியவைகள்தான். ஆனால், நம்முள்ளே செய்யப்படுகிற போர், மிகவும் அதிகமாக அஞ்சப்பட வேண்டியதாயிருக்கிறது. எந்த அளவிலாவது நாம் உலகத்தின் ஆவியினால் வெறிகொண்டிருந்தோமானால், சுயதிருப்தி, சுகவாழ்வின் ஆசை, சுகபோகப் பிரியம் ஆகிய இவைகளுக்கு இடங்கொடுத்தோமானால், பழைய குணங்களாகிய பொறாமை, குரோதம், பெருமை, வீண் ஆடம்பம், தன்னைப்பற்றி பெருமை பாராட்டுதல், துணிகரம், இறுமாப்பு, கடுங்கோபம், சண்டை அல்லது இப்படிப்பட்ட ஏதாவதொன்றுக்குக் கொஞ்சம் இடங்கொடுத்தல், மிகவும் கொஞ்சமாயிருந்தாலும் சரி, அந்தோ நாம் எவ்வளவு பெரிய ஆபத்திற்குள்ளாகிறோம்..! **- Z '95, 201 (R 1859).**

உலகம், மாம்சம், எதிராளியாகிய பிசாசானவன் இவைகளுடைய செல்வாக்கு நம்மை பெருந்திண்டியினாலும், வெறியினாலும், லௌகீகக் கவலைகளினாலும் நிரம்பக் காரணமாகின்றன. இப்படிப்பட்டவைகளினால் பாரமாக்கப்படுதல் தடுக்கப்பட வேண்டுமானால், நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகையினால் இப்படிப் பாரமடைவதிலிருந்து தப்பித்துக் கொள்ள நம் சம்பந்தமாகவும், நம்முடைய எண்ணங்கள், உத்தேசங்கள், வார்த்தைகள், கிரியைகள், சுற்றிலுமுள்ளவைகள், நம்மேல் பலிக்கிற செல்வாக்குகள் (வசீகர சக்திகள்) சம்பந்தமாகவும் நாம் ஜாக்கிரதை உள்ளவர்களும், ஆபத்தை எதிர்பார்த்து தயாராக உள்ளவர்களும், எதையும் எளிதில் நம்பாதவர்களும், கவனமுள்ளவர்களுமாயிருப்போமாக. இவைகளினால் பாரமடைந்திருக்கிற ஒருவன், ஊக்கமும், உண்மையுமுள்ளவர்களுக்கு மாத்திரம் உரிதாயிருக்கிற பலனை அடைய நிச்சயமாகவே தவறிவிடுவான். **-P '35, 101.**

**ஒத்து வாக்கியங்கள் :-** ரோம 13:11,13; 1தெச 5:6-8; 1பேது 4:7; 5:8,9; மத் 13:12-15,22; 25:13;26:41; லூக் 8:14; 1கொரி 16:13; வெளி 3:2,3; 16:15; லூக் 12:40.

**கோபுரவாசிப்பு : Z '12, 211 (R 5055)**

**வினாக்கள்:** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தில் அனுபவங்கள் என்ன? அவற்றை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்? அவற்றில் உதவியாயிருந்ததும் அல்லது இடையூறாயிருந்தது எது? பலாபலன் என்ன?